சுருக்கம்

தொழில் துறை – தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் – சென்னை நந்தம்பாக்கத்தில் அமைந்துள்ள சென்னை வர்த்தக மையத்தின் விரிவாக்கத் திட்டம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில் (எம்ஐஇ.1)துறை

அரசாணை (நிலை) எண்.245

நாள்:8.10.2015
மன்மத – புரட்டாசி 21,
திருவள்ளுவர் ஆண்டு –2046

ஆணை:

29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தொடர்பாக கீழ்க்காணும் தொழில் வளர்ச்சி திட்டம் குறித்து அறிவிப்பு வெளியிட்டார்கள்:

"தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் TIDCO-வும் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனமும் (ITPO) இணைந்து கூட்டுத் துறையில் அமைத்த நிறுவனமான, தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தால் TNTPO, சென்னை நந்தம்பாக்கத்தில் சென்னை வர்த்தக மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையம் கூடுதலாக 16,000 சதுர மீட்டர் கட்டடப் பரப்பளவு கொண்ட கண்காட்சி அரங்குகள் மற்றும் இதர வசதிகளான உணவு அரங்கம், பல அடுக்கு வாகனங்கள் நிறுத்துமிடம் Multi-tier Car Park, ஊழியர்கள் தங்குமிடம், பயன்பாட்டு கட்டடம் போன்ற வசதிகளுடன் சுமார் 298 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விரிவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கான நிதி மத்திய அரசின் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்திடம் இருந்தும், தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்திடம் இருந்தும் பெறப்படும். இந்த வசதி தமிழ்நாட்டின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை வளர ஏதுவாக இருக்கும்".

2. மேற்காணும் திட்டத்தினை தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் (TNTPO) குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் மேலாண் இயக்குநர், தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தினை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி. சங்கர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
டிட்கோ,
19–ஏ, ருக்மணி இலட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம், (TNTPO),
சென்னை வர்த்தக மைய வளாகம்,
நந்தம்பாக்கம், சென்னை – 600 089.

நகல்:
தொழில் (வசெதி) துறை, சென்னை – 9.
தொழில் (அநமு.2) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

8.10.2015
பிரிவு அலுவலர்
8.10.15